

புதுக்கோட்டை வடக்கு மாவட்டப் பொறியாளர் அணி சார்பாக மூன்றாவது தொகுதியாக கந்தர்வக் கோட்டை தொகுதியில் அமைந்துள்ள சுதர்சன் பொறியியல் கல்லூரியில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ்.ரகுபதி பரிசுத் தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கினார். உடன் மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, புதுக்கோட்டை பொறியாளர் அணி மாவட்ட தலைவர் ராய. முத்துக்குமார், துணைத் தலைவர் செல்லையா, மாவட்ட துணை அமைப்பாளர் அரவிந்த், செல்லப்பன், சத்தியமூர்த்தி தகவல் தொழில்நுட்ப அணி எழில் ராஜா ஆகியோர் உள்ளனர்.

### திருவாரூர் மாவட்ட மாணவரணி சார்பில்

# மாபெரும் கண்சிகிச்சை முகாம்!

### பூண்டி கே. கலைவேந்தன் - சா.பகலவன் பங்கேற்பு!

திருவாரூர், அக். 18 - திருவாரூர் மாவட்ட மாணவரணி சார்பில் மாபெரும் கண்சிகிச்சை முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் ஐநூறுக்கும் மேற்பட்ட பயனாளிகள் பங்கேற்று கண் சிகிச்சை பெற்றனர்.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவாரூர் மாவட்ட மாணவரணி சார்பாக கோட்டூர் ஒன்றியம் மழவராயநல்லூர் ஊராட்சியில் கண் சிகிச்சை சிறப்பு முகாம் நடைபெற்றது. பாண்டிச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனையுடன் இணைந்து நடைபெற்ற இந்த கண் சிகிச்சை முகாமில் ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்று கண் சிகிச்சை பெற்றனர்.

இந்த முகாமில் மாவட்ட துணை செயலாளர் எம்.ராமகிருஷ்ணன், கோட்டூர் ஒன்றிய கழக செயலாளர் பால.ஞானவேல், கொரடாச்சேரி பேரூர் கழக செயலாளர் பூண்டி கே.கலைவேந்தன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பொறியாளர் சா.பகலவன், துணை அமைப்பாளர்கள் வை.யோகபாலன், பொறியாளர் ஜா.நூருல் அமீன், ,எஸ்.சகுந்தலா தேவி, மழவாராயநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி ரேணுகா வெங்கடாசலம் மற்றும் கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



பெரம்பலூர் மாவட்டம், பூலாம்பாடி பேரூர்க் கழக செயலாளரும் பூலாம்பாடி பேரூராட்சி துணைத் தலைவருமான செல்வலட்சுமி கணவர் சேகர் உடல் நலக்குறைவால் திருச்சி தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரை கழக துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. நேரில் சந்தித்து உடல்நலம் விசாரித்தார். அப்போது மருத்துவர்கள் மற்றும் அவரது குடும்பத்தினரிடம் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார். மாவட்ட செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், நகர் மன்ற துணை தலைவர் து.ஹரிபாஸ்கர், வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### தாராபுரம் ஒன்றியம், அம்மாபட்டி ஊராட்சியைச் சார்ந்த

# நரிக்குறவர் இன மக்களுக்கு ரூ.64.70 வீட்டுமனைப்பட்டா!

### அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர்!

திருப்பூர், அக். 18 - தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் 12.10.2023 வியாழக்கிழமை அன்று மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம் தலைமையில்,

திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் நரிக்குறவர் இன மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டது. திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஒன்றியம், சித்தராவுத்தன் பாளையம் ஊராட்சி, கொண்டரசம் பாளையம் காடேஸ்வரர் திருமண மண்டபத்தில் அம்மாபட்டியை சார்ந்த 30 பயனாளிகளுக்கு ரூ.29.70 இலட்சம் மதிப்பீட்டில் வீட்டு மனைப் பட்டாகளையும், 64 நபர்களுக்கு சாதிச்சான்றிதழ்களையும், தாட்கோ தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் 16 பயனாளிகளுக்கு ரூ.32.00 இலட்சம் மதிப்பீடில் செயற்கை நகை தயாரித்தலுக்கான கடனுதவி மற்றும் தமிழ்நாடு மகளிர் ஊரக வாழ்வாதார இயக்கும் சார்பில் 30 நபர்களுக்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக்குழு கடனுதவி என மொத்தம் 140 நபர்களுக்கு ரூ.64,70,000/ மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

அமைச்சர் தெரிவித்ததாவது : முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் குறிப்பாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிருந்து உங்களை பழங்குடியினர் பிரிவினருக்கு அந்த பிரிவில் சேர்த்து நலத்திட்ட உதவிகள் எளிதாக வந்து சேர்வதற்கும், உங்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், உங்களை கைதூக்கி விடக் கூடிய வகையில் பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதி எல்லாம் நிறைவேற்றி வருகிறார்கள். குறிப்பாக மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகக்கட்டுப்பட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பணிபுரியும் மகளிர், உயர்கல்வி பயிலும் மாணவியர், திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டணமில்லாமலும், பேருந்துப் பயண அட்டை இல்லாமலும் பயணம் செய்ய கட்டணமில்லா பேருந்து வசதி திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். புதுமைப்பெண் என்கிற திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ் படிப்பு, பட்டயப்படிப்பு, பட்டப்படிப்பு,

தொழிற்கல்வி ஆகியவற்றில் இடை நிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் ரூ.1000/ அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது. தாய்மார்களுக்கு மாத உதவித் தொகையாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என்ற திட்டத்தை வழங்கி அவரது வங்கி கணக்கில் ரூ.1, 000 மாதம் தோறும் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், விடுபட்ட மகளிருக்கு இத்திட்டத்தில் சேர மீண்டும் வி ண்ணப்பித்தால் அவருடைய மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களுக்கும் ரூ.1,000 வழங்குவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இது போன்ற நல்ல திட்டங்களை அரசு சார்பில் வழங்குவதற்கு எங்களுக்கு ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்த முதலமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியை ரெிவித்துக்கொள்கிறேன் என்று அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் பல்வேறு நல்ல திட்டங்களை சிறப்பாக செயல் படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, தாட்கோ மூலம் கறவை மாடு வாங்குதல், வாகனம் வாங்குதல், மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு பொருளாதார கடனுதவி வழங்குதல் உள்ளிட்ட தொழில் தொடங்கும் நடவடிக்கைகளுக்கு வங்கி மூலம் கடனும், தாட்கோ மூலம் மானியமும் வழங்கப்படுகிறது.

மேலும், தொழில் தொடங்க தாட்கோ மூலம் மானியம் வழங்கப்படுகிறது. மேலும், சமூக நலத்துறையின் சார்பில் மூவலூர்

இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதி திட்டம் புதுமைப்பெண்

திட்டத்தினை துவக்கி வைத்துள்ளார்கள். இத் திட்டத்தின் மூலம்

தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ் படிப்பு, பட்டயப்படிப்பு, பட்டப்படிப்பு, தொழிற்கல்வி ஆகியவற்றில் இடை நிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் ரூ.1000 அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து வீட்டுமனைப் பட்டா வழங்குதல் போன்ற பணிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்தப் பட்டாவை பெற்ற நபர்கள் அங்கே வீடு கட்டி குடியேறிய பட்சத்தில் அடிப்படை வசதிகள் விரைவாக ஏற்படுத்தித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) வரலட்சுமி, மாவட்ட மேலாளர் (தாட்கோ) ரஞ்சித்குமார், மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் புஷ்பா தேவி, தாராபுரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சரஸ்வதி ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், தாராபுரம் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார்,

தாராபுரம் நகர்மன்றத்தலைவர், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கு.பாப்புக்கண்ணன், தாராபுரம் நகரக் கழகச் செயலாளர், நகர்மன்ற உறுப்பினர் எஸ். முருகானந்தம், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் க.செல்வராஜ் உள்பட நகரமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.


# ஊழலை ஒழிப்பதல்ல; ஒளிப்பதே மோடி அரசின் நோக்கம்!

### ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் சாட்சி!

சென்னை, அக். 18 - கௌதம் அதானி மீதான ஊழல் நடவடிக்கைகளை ஒழிப்பதில் அக்கறை காட்டாத மோடி அரசு அதை ஒளிப்பதிலேயே முழு அக்கறை காட்டுகிறது என ‘தீக்கதிர்’ நாளேடு 16.10.2023 தேதிய நாளேட்டில் தலையங்கம் எழுதி வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது.

அது வருமாறு:-

பிரதமர் நரேந்திர மோடியின் நெருங்கிய கூட்டாளியான கௌதம் அதானி மீதான குற்றச்சாட்டுக்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில் அதானி குழுமத்திற்கு சொந்தமான மும்பையில் உள்ள இரண்டு விமான நிலையங்களின் கணக்கு வழக்குகள் குறித்து கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அதிகாரிகள் விசாரணை நடத்தியதாக செய்தி வெளியாகியுள்ளது.



தீக்கதிர்

2023 அக்டோபர் 16 திங்கட்கிழமை

ஊழலை ஒழிப்பதல்ல; ஒளிப்பதே இவர்கள் நோக்கம்

இது வெறும் கண்துடைப்பு நாடகமே ஆகும். நிதி ஆயோக் மற்றும் பொருளாதார விவகாரங்கள் துறையின் கடும் ஆட்சேபணையையும் மீறி ஆறு விமான நிலையங்களை அதானிக்கு தூக்கி கொடுத்தது மோடி அரசு. அதானிக்கு விமான நிலையங் களை தர விரும்பாத உரிமையாளர்கள் மத்திய புலனாய்வுத் துறை மற்றும் அமலாக்கத்துறையினரின் சோதனைக்குள்ளாக்கப்பட்டு மிரட்டப்பட்டனர். மும்பை விமான நிலையங்களை மிரட்டி பறித்து அதானிக்கு கொடுத்தது மோடி அரசு. ஆனால் இப்போது அதானி குழுமத்தின் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், பெயரளவுக்கு விசாரணை என்ற பெயரில் திசைத் திருப்பும் உத்தியில் மோடி அரசு ஈடுபட்டுள்ளது. அதானி நிறுவனத்தின் மோசடிகள் குறித்து ஹிண்டன்பர்க் நிறுவனம் வெளியிட்ட ஆய்வறிக்கை குறித்து நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. நாடாளுமன்றத்தில் இதுபற்றி விவாதிக்கக்கூடாது என்பதற்காகவே ஆளும் கட்சியினர் நாடாளுமன்றத்தை திட்டமிட்டு முடக்கினர்.

அரசியல் எதிரிகளை பழிவாங்குவதற்காக ஒன்றிய ஆட்சியாளர்களால் அமலாக்கத்துறை மற்றும் வருமான வரித்துறை ஏவிவிடப்படுகிறது. ஆனால் ஹிண்டன்பர்க் மோசடி குறித்து அமலாக்கத்துறை விசாரிக்க வேண்டும் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமலாக்கத்துறை அதிகாரிகளிடம் மனு கொடுப்பதைக் கூட மோடி அரசு தடுத்துவிட்டது.

இப்போது வேறு வழியில்லாமல் அதானி குழுமத்தின் மீது நடவடிக்கை எடுப்பது போல காட்டிக் கொள்வதற்காகவே மும்பை விமான நிலையங்களில் விசாரணை நடைபெற்றுள்ளது. இதனால் எந்தப் பலனும் ஏற்படப் போவதில்லை. ஒருவேளை விசாரணையில் ஈடுபட்ட அதிகாரிகள் வேண்டுமானால் மாற்றப்படலாம். மோடி அரசின் முறைகேடுகளை வெளிப்படு த்திய சி.ஏ.ஜி. அதிகாரிகள் பழிவாங்கப்பட்டுள்ளது இதற்கு சாட்சியாகும். உண்மையை வெளிக்கொணர்வதில் மோடி அரசுக்கு துளி கூட அக்கறை இல்லை. தன்னுடைய கூட்டாளிகளை ஒளித்துவைப்பதிலேயே ஒன்றிய அரசு குறியாக இருக்கிறது.

இவ்வாறு ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் சாடியுள்ளது.

### இந்தியாவையே திரும்பிப்பார்க்க வைத்த மகளிர் உரிமை மாநாட்டை

# தலைமையேற்று சிறப்புற நடத்தி கொடுத்த முதல்வருக்கு நன்றி!

### ஜெ.ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் பா.ராணி அறிக்கை!

சென்னை, அக். 18 - கழக மகளிர் அணிச் செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ராணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

“ இந்தியாவை திரும்பி பார்க்க வைத்த தி.மு.கழக மகளிர் உரிமை மாநாடு. ”பெண்களின் முன்னேற்றமே சமுதாய மு ன்னேற்றமென ஓயாது உழைத்தவர் தமிழினத்தலைவர் கலைஞர் அவர்கள்.அவரது நூற்றாண்டை முன்னிட்டு தி.மு.கழக மகளிர் அணி ஒருங்கிணைப்பில் மகளிர் உரிமை மாநாட்டினை தலைமை தாங்கி சிறப்புற நடத்தி கொடுத்த தி.மு கழகத்தின் தலைவர், தமிழநாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கும்

இண்டியா கூட்டணியின் பெண் தலைவர்களை ஒருங்கே இணைத்து வரலாற்றுச் சிறப்பு மிக்க இம்மாநாட்டினை வெற்றி மாநாடாக முன்னின்று செய்த கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.,

கழக பொதுச் செயலாளர் அமைச்சர் துரை முருகன் விழாவினில் பங்கேற்று சிறப்பித்த இண்டியா கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கழக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., கழக முதன்மை செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு மற்றும் கழகத்தின் துணை பொது செயலாளர்கள் விழாவினில் பங்கேற்பு செய்து சிறப்பித்த அமைச்சர் பெருமக்களுக்கும் மகளிர் மாநாட்டு நிகழ்ச்சியினை முன்னின்று செய்து சிறப்பானதொரு முறையில் விழா ஏற்பாட்டினை செய்து கொடுத்த அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன் , அமைச்சர் தா. மோ. அன்பரசன் ஆகியோரும் தலைமைக் கழக நிர்வாகிகளுக்கும், மாவட்ட கழக செயலாளர்களுக்கும், பாராளுமன்ற, சட்டமன்ற முன்னாள் இந்நாள் உறுப்பினர்களுக்கும் கழகத்தின் சார்பணி நிர்வாகிகளுக்கும் , 2024 பாராளுமன்ற தேர்தலில் ஒன்றிய அரசில் ஒரு மாற்றத்தை உருவாக்கும் வகையில் வெற்றி மாநாடாக்கிய சிறப்பாக செயல்பட்ட கழக தூண்களாம் மகளிரணியின் அன்புச்சகோதரிகள் அனைவருக்கும் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர, ஒன்றிய, நகர மற்றும் பேரூர் பகுதி கழக நிர்வாகிகள் அனைவருக்கும் மற்றும் ஏனைய கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவருக்கும் கழகத்தின் மாநில மகளிரணி மற்றும் மாநில மகளிர் தொண்டரணியின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.



நீலகிரி மாவட்டம் பாலகொலா ஊராட்சிக்குட்பட்ட பாலகொலாவில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ், ரூ.15 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு மைய கட்டடத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், 16.10.2023 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு.உமாமகேஷ்வரி, மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் உமாராஜன், உதகை ஊராட்சி ஒன்றியத்தலைவர் மாயன் (எ) மாதன் உட்பட பலர் உள்ளனர்.



திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணல் தாராபுரம் சாலை, பலவஞ்சிப்பாளையத்தில் அமைந்துள்ள கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் எஸ்.ஜோயல், எஸ்.இன்பா ஏ.என்.இரகு, நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், பி.எஸ். சீனிவாசன், சி.ஆனந்தகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கே.கே. ரவிச்சந்திரன், வழக்கறிஞர் ச.யுவராஜ், ந.வீரகானி வெங்கடேஷ், என்.எஸ்.கே. சிவக்குமார், சா.கவியரசு, த.ஆரோன் செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஆவடியில் பாகமுகவர்கள் கூட்டம்!

திருவள்ளூர், அக். 18 - திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ஆவடி தொகுதிக்குட்பட்ட ஆவடி வடக்கு மேற்கு தெற்கு பகுதி பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் திருவேற்காடு நகரம் ஆகிய பகுதியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தலைமையில் BLA2/ BLA ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இதில் ஆவடி வடக்கு பகுதிக்குட்பட்ட பகுதி செயலாளர் ஜி.நாராயண பிரசாத் ஏற்பாட்டில் 14, 20 21, 22, 24, 37,45, ஆவடி மேற்கு பகுதி உட்பட்ட பகுதி செயலாளர் பொன்.விஜயன் ஏற்பாட்டில் 1,2,3,4,5,11,12, திருவேற்காடு நகரத்திற்கு உட்பட்ட நகரச் செயலாளர் என். இ.கே.மூர்த்தி ஏற்பாட்டில் 5, 6, 7, 8 ஆவடி தெற்கு பகுதிகுட்பட்ட ஜி.ராஜேந்திரன் ஏற்பாட்டில் 31, 33, 34,35, 40, 41, 42, ஆகிய வார்டுகளில் நடைபெற்றது.

ஆய்வு கூட்டத்தில் ஆவடி தொகுதி பார்வையாளர் ஆர். டி.இ.ஆதிசேசன், மாநகர செயலாளர் சன் பிரகாஷ் , மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டார்கள். அதேபோல் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியத்தில் உள்ள வரதராஜபுரம், நசரத்பேட்டை, அகரமேல், செம்பரம்பாக்கம், மேப்பூர், சென்னீர்குப்பம், பாரிவா க்கம், கண்ணப்பாளையம், சோராஞ்சேரி, வயலாநல்லூர், பானவேடு தோட்டம், கோள ப்பஞ்சேரி, காவல்சேரி, காட்டுப்பாக்கம் ஆகிய ஊராட்சியில் ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ் ஏற்பாட்டில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது



நாகை மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாநில அளவிலான சதுரங்கப் போட்டி கீழ்வேளூர் சண்முகா மண்டபத்தில் நடைபெற்றது. போட்டியை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வள்hச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் தொடங்கி வைத்தார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர், கீழ்வேளூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ப.கோவிந்தராசன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.பழனியப்பன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா. மாரிமுத்து, கீழ்வேளூர் பேரூர் செயலாளர் கா.அட்சயலிங்கம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் விமல் மற்றும் பலர் உள்ளனர்.